உ

கடவுள் துணை.

# அல்லி * அர்ஜ்ஜுனா.

முதற்பாகம்.



சென்னை இட்டா,
சக்கரபாணிநாயுடு அவர்களது
சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1920. [அணா 4.

ரிஜிஸ்டர் காபிரைட்.

நெ-18, சம்புலோசா தெரு,-சென்னை.

உ

முருகவேள் துணை.

உலகப் பிரசித்திபெற்ற

இராஜப்பார்ட்டு சூரிய நாராயண பாகவதர்,
மதுரை-பைரவ சுந்தரம்பிள்ளை, பி. எஸ். வேலுநாயர்
டி. ஜி. ஜெகநாதநாயுடு, ஜி. எஸ். முனிசாமிநாயுடு,
ஜி. என். சாமிநாத முதலியார், சின்ன மகாதேவ ஐயர்,
டீ-எஸ். பரமேஸ்வரஐயர், சின்னசாமாஐயர்,
பார்ஸி-ஜெகன்மோகன தி. குப்புசாமி முதலியார்
டி-எ. இராஜாமணி அம்மாள், வி-பி. ஜானகி அம்மாள்,
கே. அரங்கநாயகி அம்மாள், முதலிய
நாடககம்பெனியா ரவர்களால்

நடாத்திவருகிற

THE MADURA TAMIL SANGAM

# அல்லி-அர்ஜ்ஜுனா.

முதற்பாகம்.

இஃது - மதுரைமாநகரம்,

வித்வான் சடகோபதாஸரவர்கள்

குமாரர்

## இராஜவடிவேல் தாஸர்

இயற்றியதை,

சென்னை:
சக்கரவர்த்தி அண்டு கம்பெனியாரவர்களது
சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1920. அணா - 4]

ரிஜிஸ்டர் காபி ரைட்.

நெ, 13. ஈம்புலையர் தெரு, சென்னை.

ஸ்ரீ

கண்ணபிரான் துணை.

# அல்லி-அர்ஜுன-ம்.

## முதற்பாகம்.

### விநாயகர் துதி.

விருத்தம்.

மானிலந் தனிலேமாயன் மைத்துன ஞனபார்த்தன்
மீனவன் பதியையாளும் மின்னிடை யல்லிதன்னை
வானவர் முனிவர்மேவ மணஞ்செய்த சரிதைகூற
யானைமா முகவன்பாத மலரிணை யகத்தில்வைப்பாம்.

தரு.

(பேகி யாவ்லோ ஜாவால-என்றமெட்டு.)

பல்லவி.

உமை பாலகஞன விநாயகா இந்த
ஞாலமீதருள் செய்யுந் தாயகா

அநுபல்லவி.

வேலன் சகோதரா மிக்க தயாபரா
விண்ணோர் பணிவல்லபை மனோகரா நின்னை
வேண்டினேன் நற்சேவை தருவாயே என
தாண்டவா கருணை நீ புரிவாயே (உமை)

சரணம்.

அருச்சுனனுகந்து அல்லியைச் சிறந்து
அன்பாய்மணந்த கதையை மகிழ்ந்து வெகு
ஆசையாய்ப் பாடிடவரமேதா கூடில்
ராஜவடிவேலன் தமிழ் வரதா

### சுப்ரமண்யக்கடவுள் துதி.

விருத்தம்.

அன்பருக் குதவும்வேலா அசுரரை வதைத்தவேலா
இன்பமாயருள் செய்வேலா இகத்துள்ளோர் வணங்கும்வேலா
துன்பமே யகற்றும்வேலா சுரர்கள்கொண் டாடும்வேலா
தென்பரங் கிரியின்வேலா திருவருள் புரிவாய்வேலா.

பாடல்.

(ஆயேமுஜே தர்த்தேஜி-என்றமெட்டு.)

கண்ணிகள்.

தேவா சண்முகா மயின் மீதிலேறி வா வா
பாவமதைக் கொய்வாய் பதமருள்வாய்

பரமனுக்குபதேசா பத்தர் நேசா
பாரிலென் துயர்தீர்க்கப் பக்ஷம் வைக்காதேனோ

கோரினேன் நற்பரனே குருபரனே
குமரா அமரர்நேசா குன்றுறை வாசா

## கலைமகள் துதி.

விருத்தம்.

தென்னவன் பதியதன்னைச் சிறந்தர சாண்டுவந்த
மின்னிடை யல்லிமாது சரிதையை விளம்புதற்கு
அன்னையே கமலவாணி யயன்மகிழ் வுறுகல்யாணி
என்னுடநா வில்வந்து இதமுறவுதவி செய்வாய்.

பாடல்.

(பங்காஹிலாஹே சாரீரா-என்றமெட்டு)

பல்லவி.

தேவிசரஸ்வதி வாணி திவ்ய கல்யாணி

அநுபல்லவி.

ஆவலா யெனது நாவினில் வருவாய்
சேவை தந்தருள் புரிவாய்
திருவருள் வாய் (தே)

சரணம்.

உயர்வெண் டாமரையில் ஓங்கிடும் தாயே
நயமுடன் கிருபைசெய்வாயே நாவில்வாழ்வாயே

---

1-வது சீன். அருச்சுனன் மாளிகை.

## சபைவணக்கம்.

பாடல்.

(சபையோர்கட் கென்னுட-என்றமெட்டு)

கண்ணிகள்.

மகிமை சிறந்துறு மாசபை நாடி
வந்தனந் தந்தேன் மிகத் தேடி
அகிலம் பரவிய அந்தணர் தமக்கும்
அரனயன் மாலவர் அமரர்கட்கும் (ம)

நன்னெறி யுள்ளதோர் மகிபர்க்கும்
ராஜவடிவேல் தமிழுக்கும்
அன்னை தந்தை குரு தெய்வந் தனக்கும்
அழகிய வெண்கதிர் மரபினர்க்கும் (ம)

## வேதியர் முறையிடுதல்.

பாடல்.

(கண்மணியே பெண்மணியே-என்றமெட்டு.)

கண்ணிகள்.

சந்த்ரகுல வேந்தர்களே சதிக்கென்ன செய்வோம்
திருடர் செய் சதிக்கென்ன செய்வோம்
மந்தைப் பசுக்கள் தன்னை வந்து திருடியே
சென்றனர் வந்து திருடியே (சந்)

ஆறிலொரு கடமைவாங்கி அரசு செய்வது
இதுதானோ அரசு செய்வது
கூறொண்ணாத செங்கோல்முறை குலைந்து போனதோ
மன்னர்களே குலைந்து போனதோ (சந்)

இப்படி பராமுகமா யிருக்கலாகுமா
கார்த்திடா திருக்க லாகுமா
எப்படிப் பிழைப்பதந்தோ ஏது செய்குவோம்
புவிதனில் ஏது செய்குவோம் (சந்)

வேதியர்:—சந்திரகுலத் தரசர்களே? எங்களின் மந்தைப் பசுக்களைத் திருடர்கள் வந்து திருடிக்கொண்டு செல்கிறார்கள் இனி

யாது செய்வோம் ஆறிலொருகடமை வாங்கிக்கொண்டு இவ் வித பராமுகமாயிருப்பது நீதியோ? அல்லது வேதத்தின் முறையோ! இப்போது வந்து பாதுகார்த்தாலொழிய நாங் கள் பிழைப்பதறிது.

## அருச்சுனன்.

பாடல்.

(ஜோக்காங் தேனே-என்றமெட்டு)

கண்ணிகள்.

வேதியர்கா ளஞ்ச வேண்டாம்
வெல்லுகிறேன் கள்வர்களை
பாது கார்ப்பே னுருதியே
பக்ஷமதாக வுங்களை (வே)

சித்தங்கலங்கிட வேண்டாம்
சீக்கிரமாகக் கள்வரை
இத்ததி வதைக் குறேனுன்
இங்குரைத்தேன் சதுர்மறை (வே)

அருச்சுனன்:—அந்தணர்களே! யாதொன்றுக்கும் கவலைவேண்டுவ தில்லை அந்தப் பாவிகளான கள்வர்களைச் சங்கரித்து உங்கள் பசுக்களை மீட்டிவந்து தருகின்றேன் அவாளவாள் இல்லத்தே செல்லுங்கள்.

பாடல்.

(இந்தக் கிழவனுன்னை-என்றமெட்டு.)

கண்ணிகள்.

அன்னீதக் கள்வர்களை யதஞ்செய்ய ஆயுதம்
என்னிட மில்லையே யிதற்கு வழியெவ்விதம்
ஆயுதங்கள் தருமர் அந்தப் புரந்தன்னில்
போயதை யெடுக்கவேணும் புலப்படுதில்லை யின்னே
முனிநாரதருஞ் சொன்ன முறைப்படிதருமர் தானே
தனியாய்த்துரோபதியுடனே சார்ந்துரும்நாளில் நானே
பாணமெடுக்கச் சென்றூற் பாவங்கள் நேருமின்று
யானென்ன செய்வேனையோ ஆலோசிப்பேன் மூயன்று

அருச்சுனன்:—இந்தத்தருவாயில் ஆயுதம்வேணுமே நாரதர்சொன்னவாக்கியத்தின்படி அந்தப்புரத்தில் துரோபதியுடனே இவ்வருடத்தில் வாசம்செய்வது என்னுடைய அண்ணாவாகிய தருமருடைய முறையாச்சே இப்போது நாமங்கு சென்றால் பாவம் நேரிடுமே இதற்குயாது செய்வது இந்தப் பாவத்திற்கு யாத்திரை சென்று தீர்த்தங்களாடிப் பாவவிமோசனஞ்செய்துக்கொள்வேன் இப்போது பிரஜைகளைக் காக்கவேண்டியதவசியமே இதோ ஆயுதம் எடுத்து வரு றேன்.

கதாசாரம்.

தருமரிருக்கும்படியான அந்தப்புரஞ்சென்று வில்முதலான ஆயுதங்களை எடுத்துக்கொண்டுவந்து கள்வர்களை அதாகுதம் செய்கிறது.

---

2-வது சீன். வழிமார்க்கம்.

அருச்சுனன் கள்வர்களை வெல்லுகிறது.

பாடல்.

(சாரங்கந் தன்னிலோர்-என்றமெட்டு.)

பல்லவி.

பாவியவர்களைப் பாணத்தால்
வெல்லுகிறேனே இந்தப்

அநுபல்லவி.

தாவிவந்து மந்தைப்பசுக்களைத் திருடிய
சண்டாளரைத் துண்டஞ்செய்து
அண்டர் மகிழச்செய்வேன் (பா)

சரணம்.

அஞ்சாமல் வந்து திருடத் துணிந்தார்கள்
ஐவர்பாண்டவர் வலுவை யறியார்கள்
கொஞ்சமேனுமவர்களை விடுகேனே
கொடியதொரு கணையினாலே
கொல்வேன் வெல்வேன் தருணம் (பா)

## கதாசாரம்.

இவ்வாறு அருச்சுனன் தன்னுட ஆயுதங்களினுலே கள்வர்களைத் தம்சித்து வேதியர்களுடைய பசுவுக்களை மீட்டிவந்து அவாள வாள் வசம் ஒப்பித்து ஆதரணைசெய்துவிட்டு ஆலோசிப்பது யாதெனில் நாங்களைவரும் துரோபதியுடனே ஒரு வருடத்துக்கு ஒருவர் வாசஞ்செய்யவேணுமென்றும் ஒருவர் முறையில் மற்றநால்வருஞ் செல்லக்கூடாது என்றும் மீறிச்சென்ருல் பாவத்துக்குள்ளாவரென்றும் இந்தப்பாவ நிவர்த்திக்கு யாத்திரை சென்று தீர்த்தமாடி வந்தால் பாவந்தீருமென்றும் நாரதருடைய வாக்கியமாதலால் தருமருடைய முறையில் நாம் பிரவேசித்தபடியால் பாவத்துக்குள்ளானேமென்று தருமரிடம் விடைபெற்றுக்கொண்டு தீர்த்தயாத்திரை செய்யக்கருதிகிருஷ்ணபகவானிடம் சென்று துதித்தான்.

### அருச்சுனன் பாடல்.

(உடுமலையின் முத்து-என்றமெட்டு)

கண்ணிகள்.

மாதவ முகுந்த பரந்தாமா மிக
வந்தனஞ் செய்தே னச்சுதநாமா எந்தன்
வள்ளலே கருணைபுரி
நல்லது வாரகா புரி வாசா
அன்பர் நேசா

கிருஷ்ணன்.

சொந்தமாய் மைத்துன வருவாயே உங்கள்
சுற்றத்தாருஞ் சுகமோ சொல்வாயே வெகு
துரிதமுட னெம்மை நாடிக்
கருதிவந்தேன்கொண்டாடிச் சொல்வாய்
நீ மகிழ்வாய்

அருச்சுனன்.

தீர்த்தயாத்திரை செய்யவே தேடி வந்தேன்
தேவனே மிகச்சங்கீதம் பாடி இன்று
சிந்தை மகிழத்துணையாள்
வந்திடவேணு மினிதாய் சேர்ந்து
செல்வோ மோர்ந்து

கிருஷ்ணன்.

சந்தோஷ மிகக் கொண்டேன் பர்க்குணனே இதோ
தன்மையாய் வருகிறேன் விற்பனனே இந்தத்

தாரணியிற் றீர்த்தமாடி
பூரணமாயிங்கு நாடி சார்ந்து
வருவோம் நேர்ந்து

கிருஷ்ணன்:—அருமை மைத்துனனாகிய அருச்சுனா மிகவும் பிரீதியுற்று எம்மைத் தேடிவந்த காரணம் யாது.

அருச்சுனன்:—சுவாமி அந்தணர்களுக்கு இடையூறுசெய்த கள்வர்களைச் சங்கரிக்கும் பொருட்டாக எனது அண்ணாவாகிய தருமரானவர் துரோபதியுடனே அந்தப்புரந்தனிலிருக்கும்போது நான் ஆயுதமெடுக்கச்சென்றதினாலே அந்தப் பாவந் தீருவதற்கு நாரதர் வாக்கியத்தின்படி தீர்த்தமாடி வரவேண்டியதாயிருக்கிறது தாங்கள் எனக்குத் துணையாக வரவேணும்.

கிருஷ்ணன்:—மைத்துனா மிகவும் சந்தோஷம் இதோ வருகிறேன்.

---

8-வது சீன். மதுராபுரி பூங்காவனம்.

விஷயம்.

பூலோகத்திலுள்ள தீர்த்தயாத்திரைசெய்து மதுரையம்பதிக்குவரும்பொழுது அங்குள்ள பூங்காவனச்சிறப்பு கிருஷ்ணன் அருச்சுனனுக்குக் கூறுதல்.

கிருஷ்னன் பாடல்.

(பரமானந்தமெய்ப்பரங் என்றமெட்டு.)

பல்லவி.

அருமைமைத்துனாஇதோ பாராய் கூடலம்பதி
அழகுநந்தவனத்தை நேராய்

அநுபல்லவி.

திருவளர்ந்தோங்கியேசிறந் திருவாக்ஷி
செண்பகமல்லிரோஜா திகழுறுருக்ஷி
பெருமையோ அருமைப் பேரின்பமாக்ஷி
பித்தனாருளது பெருகிடுங்காக்ஷி (அ)

சரணம்.

கருமதையமுனேகிருஷ்ணா கங்கா
நதிதீரங்கள்

உரியதோர்சரஸ்வதி துங்க
பத்திரிகுமரி

அறிதானகாவேரி யிலங்கும்
கோதாவரியும்

நெறியாகவேநாமு மங்கங்கு
தீர்த்தங்களாடி

நத்திகாளத்தி லகத்தில்மிகுத்த சீர்காழி
நன்மைசேர்காசி

சித்தர்துதித்தேவரத்தையே பெற்றுயராழி
சூழும்புவியில்

நலமுறுமாபத்திராஜலமெழில் திருப்பதி
ரஞ்சிதபண்டரிபுரங்காஞ்சி சிதம்பரமும்

இலகிடுந்திருவண்ணமலை திருவொற்றியூர்
இணையில்லாததிருவாஞ்சி திருவாரூரும்

நற்சுகங்கொடுக்குமாவயித்தியீஸ்வரன் கோவில்
நான்மறைபரவுமாயூரம் நந்திபூஜித்த

உச்சிதத்திருவையா றுத்தமக் கும்பகோணம்
உயர்திருவானைக் காவல்தோரும்

ஓங்கும் ஸ்ரீரெங்கம்
ராமேச்சுரமுதல் நாடிநாம் சென்று
நல்கியேதெரிசித்து வந்தோமே யின்று
மாமதுரைராஜவடிவேல் தமிழைப் பாடி
வழங்குமின்னகர்க்கிணை உண்டோசொல்லுறவாடி (அ)

கிருஷ்ணன்:—அருச்சுனா! இந்த உலகத்திலுள்ள புண்ணியஸ்தலங்களெல்லாம் சுற்றித் தீர்த்தங்களாடி அங்கங்குள்ள தேவதைகளைத் தெரிசித்து வந்தோமே இந்தத் திருவாலய க்ஷேத்திரத்தின் மகிமையைப் பார்த்தனையா இங்குள்ள பூஞ்சோலைகளின் சிறப்பு எந்தஸ்தலத்திலுமுண்டோ இல்லை ஆகையால் இந்தப் பாண்டியநாட்டுள் பிரவேசித்து தீர்த்தங்களாடி சோமசுந்தரர் மீனம்பிகையைத் தெரிசித்து வருவோம் வருவாயாக.

## முத்துவாணியர் செட்டியார்.

புலம்பல்.

(தும்பின மோரி-என்றமெட்டு.)

கண்ணிகள்.

மதுரைமீ னும்பிகையே வணிகனு னென்னுசெய்வேன்
இதுவரை குறையாமுத்து இன்றுதான் குறைந்ததே
ஆங்காரமுள்ள அல்லி யரசியி னுக்கினையால்
தீங்குவரு மெங்குய்வேன் தியங்குறேன் புவிமீதே
ஒருகள முத்தளவி லொருபடி குறைந்ததே
கருணைத் தடாதகையே கலங்குதே யெனதுநெஞ்சம்
கோமாட்டி யல்லிராணி கொடிய ஆக்கினைசெய்வாள்
தீமைகள் வராதருள் தேவியே நானுன்றஞ்சம்

முத்து வாணியன்:—மதுராபுரியி லெழுந்தருளிய ஜெகதீஸ்பரி மீனும்பிகையே இனி யாதுசெய்வேன் அனுதினம் அல்லிமகாராணிக்கு செலுத்தவேண்டிய முத்து ஒருகலம் இதிற் குறைவிருந்தால் அரசியினுடைய ஆக்கினை கடினமானதே இன்று ஒருபடி குறையுதே இனி என்னுடைய தேகத்தைப் பிளக்கும்படி கொலையாளிகளிடம் ஒப்பிப்பாளே இனி நான்பிழைப்பது எவ்விதம் ஐயோ! தெய்வமே! உன்னுடைய கிருபையானது இதுதானோ, பரமேஸ்வரி உன் பாதமே கதி.

அருச்சுனன் வாணியச்செட்டியாரை வினவுதல்

விருத்தம்.

உடலது பதரிக்கொண்டு வோயாம லலறிமெத்த
படவர வாபரணன் பரவிய கூடல்தன்னில்
திடமிழந் தழுதுநீயே தியங்குவ தேனோவுந்தன்
னுடநக ரெதுதான் சொல்வாய் உத்தமனீ யாரப்பா.

அருச்சுனன் பாடல்.

வீரராவண சம்மாரா என்றமெட்டு.

பல்லவி.

இங்கு ஏனையா இவ்வாறு புலம்புகிறீர்
மேனிதளர்ந்தழுது வாடுகிறீர்

அநுபல்லவி.

மானிலமீதுமக்கு வன்கொடுமைசெய்ததோர்
ஈனர்கள்தன்னையிப்போ தெங்கள்முன்னேகூறுவீர் (ஏ)

சரணம்.

பேதையைப்போலவே தயங்கியல்லி
பேரதையடைவுடனே சொல்லிச்சொல்லி
வேதைகொள்ளுவதென்ன விபரஞ்செல்வீர்விற்பன்ன
மெய்யதாய்ப்பாதுகார்ப்போம்
வையமீதாதரிப்போம்
ஐயாகவலைதீர்ப்போம் (ஏ)

அருச்சுனன்:—ஐயா இப்போது இந்தமார்க்கத்தில் ஒண்டியாகவிருந்து அல்லியினுடைய நாமதேயத்தைச் சொல்லிக்கொண்டு புலம்பியழுவது விபரம் யாது இதைச்சொல்வீராகில் உம்மை யாங்கள் பாதுகாக்கின்றோம்.

## முத்துவாணியர் செட்டியார்

பாடல்.

(கண்டிராஜா நாடகத்திலுள்ள அன்புமிகுத்திடு மென்துரையே

(என்ற சந்தத்தின்மெட்டு.)

கண்ணிகள்.

எந்தன்மனத்துயர் என்னசொல்வேன்
ஈசன்செயலுக்கு எங்குவுய்வேன்
வந்தெனைக் கேட்பதேன் வருமை தனை
மாற்றிடுவீரோ அகன்று போவீர்

முத்து வாணியன்:—ஐயா என்னையேன் வீணாகவினவுகிறீர் என்னுடைய துன்பத்தைத் தெரிவித்தால் நீக்கிவிடுவீர்களோ எனது காலவித்தியாசத்தினை லிவ்வாறு புலம்பிக்கொண்டிருக்கிறேன் நீங்கள்வந்த காரியத்தைப் பார்த்துக்கொண்டு செல்வீர்கள்.

அருச்சுனன் பாடல்.

(அம்பாள் மதுரைமீனாக்ஷி-என்றமெட்டு.)

கண்ணிகள்.

இன்று ஐயா கவலைவிடு வீரே துன்பம்
யாவுந்தீர்ப்போம் நேரே எங்களை
யகலுவீரென் நீரே
அதைப்பகரு வீரே

இங்கு துன்பமுமக்குவந்ததேது நீர்
சொல்கிற அல்லிமாது வசிக்கின்ற
தூய்நகரம் யாது
துணைசெய்வோ மிப்போது

அருச்சுனன்:—ஐயா வணிகரே! உமக்கு துன்பம் நேரிடவேண்டிய காரணம் யாது? நீர் சொல்லிக்கொண்டிருக்கிற அல்லியென்பவள் யார்? அவள் வசிக்கும்படியான நகரம்யாது? அந்தப்பெண்மணியால் நேரிட்ட துன்பமென்ன விபரீதமாகத் தெரிவிப்பிராகில் இப்போது உம்முடையகவலையை மாற்றுகிறோம்.

முத்துவாணியன்சொல்கிறது.

நொண்டிச்சிந்து.

பாண்டியன் தேசமென்னும் மதுரைப்
பதியதில்மீனும் பிகையருளால்

ஆண்டிடும் அல்லிராணி அவள்
அழகதைப்பார்த்துரதி நாணங்கொள்வாள்

திருமகள் கலைவாணி பார்வதி
திலோர்த்தமையூர்வசி மேனகைரம்பை

சுரர்புகழிந்த்ராணி முதல்வள்
சுந்தரந்தனைக்கண்டு அதிசயிப்பாா

அரசுக்கு ராஜசிங்கம் அவள்
ஆங்காரமுள்ளதொரு கொடுசூரி

உரமிகுந்திடும் நீலி இந்த
உலகிலவளுக்கிணை யெவருமில்லை

ஆண்வாடை யணுகினாலோ ததியே
யதமதுசெய்திடுவாள் ஆண்மைசாலி

நான்மறை சாஸ்திரமுதல் மிகவே
நன்குறக்கற்றுணர்ந்த பெண்கொடியாள்

கலமுத்து தினமும்நானே அவளுக்கு
கனமுடனளப்பது வழமையின்று

அளவினி லொருபடியே குறைந்தது
அவளென்னை யதஞ்செய்வாள் குறையிதுதான் (பா)

அருச்சுனன் விருத்தம்.

தொல்லையை விடுவீரையா சுகமுனக் குண்டுசொன்னோம்
நல்லதென் மதுரைதன்னை யரசது செய்யும்ராணி
யல்லியின் னரசியாளுக் கழகுநன் மணமுமாச்சோ
சொல்லுவீர் விபரமாகத் துணிந்திதமாகத்தானே.

அருச்சுனன்:—ஐயா! செட்டியாரே நீர் வியாகூலப் படவேண்டாம் அல்லியென்னப்பட்ட பெண்மணிக்கு விவாகமாய் விட்டதோ தெரிவிப்பீர். நீர் கொடுக்கவேண்டிய கலமுத்துக்கு எவ்வளவு குறைவாயிருக்கிறது பதராமற் சொல்வீர்.

செட்டியார்:—ஐயா! படி முத்துக்குறையுது அல்லிராணிக்கு விவாகமேகிடையாது புண்ணியவான்களே.

அருச்சுனன்பாடல்.

(மானைப்பிடித்துத்தரவேணுமே என்றமெட்டு)

பல்லவி.

ஆயர்குலத்துதித்த நாதனே அரி
மாயவனே திவ்யபொற் பாதனே

அநுபல்லவி.

தூயவணிகருடதுயரது நீங்கிடவே
நேயமாயருட்கண்பார் நிதியது வோங்கிடவே (ஆ)

சரணம்.

ஒருகலமுத்ததனி லொன்றுங் குறைந்திடாமல்
சரியாயிருக்கவேணும் தயைசெய்திடுவீர் மண்மேல் (ஆ)

அருச்சுனன்:—சுவாமி! தாங்கள் இந்தச் செட்டியாருக்குக் கிருபை கூர்ந்து கலமுத்தும் சரியாயிருக்கும்படியருள்செய்யவேணும்.

கிருஷ்ணன்:—காண்டீபனே! நீ கூறியபடி அருள்செய்தோம் நாம் வந்த காரியம் எதுவுண்டோ அதைப் பார்த்துக்கொண்டுநமது எதாஸ்தானம் செல்வோம் வருவாயாக.

அருச்சுனன் பாடல்.

(தேவாதிதேவா-என்றமெட்டு.

கண்ணிகள்.

மாயவனேயிந்த வையக மீது
மறைநெறியில்லாத விந்தை யிப்போது
ஆயனேகண்டோ மடக்கி யாளாது
யாமிருப்பது மிகவுந் தகாது

ஆண்வாடை கிட்ட வணுகலாகாதாம்
அண்டினலவள் சின மடங்காதாம்
தானென்னுமகந்தை சற்றும் போகாதாம்
தாஷ்டிக மவட்கிணை கிடையாதாம்

பாரிற்பதுமைப் பதாகையே கட்டி
பாங்குடனரசு செய்வதிற் கெட்டி
காரியாமிப்போது அல்லியைக் கிட்டி
கண்டறிவோம்நா மிதற்கென்ன அட்டி

அருச்சுனன்:—கிருஷ்ணபகவானே! இது என்ன விபரீதமா யிருக்கிறது ஒரு பெண்ணனவள் ராஜரீகஞ்செய்கிருளாம். சகலநூல்களுமுணர்ந்தும் அழகிற்சிறந்தும்வலுமையிலும்மிகுந்தவளாம் அவளுக்கு நிகர் இந்த வுலகத்திலே கிடையாதாம் அல்லியென்று பெயர் படைத்தவளாம் அவளைப்பார்க்கவேணும்.

கிருஷ்ணபகவான்-விருத்தம்.

பார்த்திபாநாமுமின்று பரிவுடன்சகலதீர்த்த
யாத்திரைசெய்துவந்தோம் அழகியமதுரைதன்னில்
நேர்த்தியாயணுகிநல்ல நிமலனைத்தொழுவோம்வாவா
கீர்த்திசேரல்லிதன்னைச் சிறிதிலும்பார்க்கவேண்டாம்

தர்க்கம்.

(சோமசேகரனருளும் என்றமெட்டு.

கண்ணிகள்.

கிருஷ்ணன்.

வந்தகாரியமிதுவோ சொல்விசையா வீணில்
இந்தயோசனையாலே கீர்த்திக்கும்வசையா

அர்ச்சுனன்.

அல்லியென்பவளைக் கண்ணுற்பார்க்கவேணும் அவள்
வல்லமையைநாம்கண்டு அடக்கவேணும்

கிருஷ்ணன்.

நல்லதீர்த்தயாத்திரை செய்யமகிழ்வாய் வந்து
தொல்லையானகீர்த்தி தேடலாமோசொல்வாய்

அருச்சுனன்.

சொந்தமாயவளைக் கண்டாலென்கலிதீரும் ஜெய
நந்தகோபாலரேநீ ரிப்போதுகண்பாரும்

கிருஷ்ணன்:—பார்த்திபா நல்லயோசனை செய்தாய் பேஷ் நாம் வந்தகாரியமென்ன இப்போது நீயாலோசித்திருக்கிறது சரியோ இந்த உலகத்தின்கண் எவரும் எவ்வாருறைலென்ன அதைப்பற்றிநாம் கவனிப்பதுயாது பிரயோசனம் நீ நினைத்திருக்கிறதை விட்டுவிடுவாய் நாம்வந்திருக்கப்பட்டகாரியத்தைப்பார்ப்போம் வருவாய்.

அருச்சுனன்:—கோபாலரே! தாங்கள் சொல்வதுசரியேஅந்த அல்லியென்னப்பட்டவளை நான் கண்ணுற்றுப் பார்த்தாலொழிய என் மனதானது வோர்மையாகாது அவளைப் பார்க்கும படியான தந்திர உபாயஞ் செய்தருளவேணும்.

கிருஷ்ணன்:—அச்சுருசுனா! இப்போது ஒருதந்திரஞ் செய்கிறேன் என்னவெனில் ஆரணியத்திலுள்ளமிருகங்களையேவினல் பயிர்களை யழிக்கும் அவள்வேட்டைக்குவருவாள் பார்த்துக்கொள்வோம்.

---

4-வது சீன். சபாமாளிகை.

அல்லிராணி தர்பார்.

கடவுள் வணக்கம்.

சந்த விருத்தம்-ஆதிதாளம்.

சத்திகௌரிசிவை யம்பிகையே
தகைசேர்மதுரை யம்பாலியே
சித்திமுத்திதரு சங்கரியே
தினமும்மறவேனருள் சுந்தரியே

நத்திவருவோர்வினை தீர்ப்பவளே
நளினமலர்த்தாளதை யளிப்பவளே
பத்தியுடனேயினி நானுனையே
பணிசெய்துகந்தேன் ததியாளெனையே

அல்லி பாடல்.

(தியாஜ ராஜ ரா்ஜ-என்றமெட்டு.)

சீருலாவு மாமதுரைத் தேவிமீனவளே அன்பர்
சித்தத்தமர்ந்திடும் உத்தமியேபராசத்தி உமையவளே

தாரிலகுஞ்சொக் கேசரினிடபாகஞ்
சார்ந்துறும் அம்பிகையே
தவமுனிவரரிமையவ ரனுதினந்தொழுந்
தாயேதடா தகையே
சங்கரிகௌரியே ரீங்காரியோங்காரி
சர்வலோகேஸ் பரியே
தரணிபர்மகிழ வரசதுவோங்கிடத்
தர்க்கார்த்தருள் புரியே தர்-தர்-தர் (சீ)

நடனப்பெண்கள் நர்த்தனஞ்செய்கிறது.

பாடல்.

(தேகக்கோனரி வாரிச்சலோ-என்றமெட்டு.)

கண்ணிகள்.

வாசங்கமழ்மாமதுரை வாழரசியல்லிமகாராணி
வந்தனங்கள் தந்தோமின்று
மாசில்லாத பூலோக விந்த்ரீாணி
தேசமன்னர்போற்றுகின்ற செல்வியேராஜரீகசிங்காரி
சிறந்துநடம் புரிந்துகந்தோம்
நேசமா யெங்களையா ளொய்யாரி

தேசவிசாரணை பாடல்.

வந்தனந்தந்தோம்-என்றமெட்டு.)

மந்திரிகள்.

மதுரைவாழ் அல்லி மகாராணி
வந்தனஞ் சேய்தோம் மகாராணி

அல்லி.

மந்திரிகளே யிதோ கல்யாண் கல்யாண்
மட்டில்லாத நாட்டின்செய்தி
இஷ்டமாயென்னிடங் கூறிடுவீர்.

அல்லி:—மந்திரிகளே! நமது நாட்டின் செய்திகளை கேட்க உத்தேசித்திருக்கிறேன்.

மந்திரி:—இதற்குத் தடையென்ன இருக்கிறது.

அல்லி பாடல்.

(தேகத்தினில்வலு-என்றமெட்டு)

கண்ணிகள்.

ஆசைக்கினிய பதாதிக்கதிபதி
யாகத்தோன்றிய செங்கமலம்
தேசத்தினிலமர் ஆண்மைப்படைகளின்
தீரத்தனமதைச் சொல்வீர்நலம்

செங்கமலம்:—எங்களரசியே! நமது சேனைகளின் வலுமையின் பெருமைகளைக் கூறுகிறதற்கு எளிதல்ல மிகவுந் தாஷ்டிகத்துடனே வாழ்ந்து வருகிறார்கள்.

அல்லி பாடல்.

(இந்தக்கிழவனுன்னை என்றமெட்டு.)

கண்ணிகள்.

முத்திரைவைக்குஞ்ஞாய மொழிகுவாயெதுமுண்டோ
ரத்திநம்பாளினி நற்செய்தியரசிலுண்டோ

ரத்திநம்பாள்:—மதுரைக்கரசியே என் விஷயத்தைப்பற்றி யோசிக்கவேண்டாம் அம்மணி!

அல்லி பாடல்.

(போகவிடை தரவேண்டும்-என்றமெட்டு.)

கண்ணிகள்.

தந்திரமுள்ளயூக சாலியே
மந்திரிபவளசேனு நீயே
சந்ததம்நகர்செழித்துப் பிரஜைகள்
சார்ந்துவாழுகின்ருரா சொல்வாயே

அல்லி:—பவளசேனா நமது நாட்டில் மாதமும்மாரி பெய்து எங்குஞ் செழிப்போங்கி பிரஜைகள் யாதொரு குறைவின்றி மகிழ்ச்சியுடனேவாழ்கிறார்களா தெரிவிப்பாய்.

பவளசேனா:—அம்மணி நமது தேசத்தின்கண் மாதம் மூன்றுமழை வருஷித்து நாட்டிலுள்ள பிரஜைகள் செழிப்புடன் வாழ்ந்து வருகிறார்கள்.

குடிகள்முறையிடும் பாடல்.

(கந்தபரங்கிரிவாழ் என்றமெட்டு.)

கண்ணிகள்.

அண்டியேவந்தோம்அல்லிமகாராணியே மிகத்
தெண்டஞ்செய்தோம்குடிகள்மகாராணியே
அடவியில்விலங்கின மிடரதுவிளைக்குது
ஐயையோநொந்து மெய்யோதளர்ந்து (அ)

நஞ்சைபுஞ்சைகளெல்லாம் நாசமாச்சு மிகப்
பஞ்சைகளானஎங்கள்பயிர்கள்போச்சு
நம்பியேவந்தோம் வெம்பியேயிந்த
நாட்டினின்றொல்லை கேட்டதுமில்லை. (அ)

குடிகள்:—அம்மணி குடிகள் வந்தனஞ்செய்கிறோம் எங்கள் பயிர்களெல்லாம் காட்டிலுள்ளமிருகங்கள்வந்து அழித்துவிட்டது எங்களைப் பாதுகார்க்கவேணும்.

அல்லி பாடல்.

(அஞ்சிடவேண்டாம் என்றமெட்டு.)

கண்ணிகள்.

அல்லிநான்வருவேனங்கு நாடி
அடவிவிலங்கினத்தைவேட்டை யாடி
வல்லபமிகுந்தன்பு கூடி
மனக்கவலைமாற்றுவேன்கொண்டாடி

தொல்லைதீர்ப்பேனஞ்சிடாதீர்
துரிதமாய்மண்மீதில்
சுகுணஎந்தன்கியாதி
துலங்கமிருகாதி யெல்லார்
தொல்லைக்கிறேன்மலையாதீர்

அல்லி:—பிரஜைகளே யாதொன்றுக்கும் அஞ்சிடாதீர்கள் அந்தக் கானகத்திலுள்ள மிருகங்களை வேட்டையாடி உங்களுடைய துயரத்தை மாற்றிப் பாதுகார்க்கின்றேன் நீங்கள் எதாஸ் தானம் செல்வீர்களாக.

பாடல்.

(பகாரிகூஷல் மீயாம்சலோ-என்றமெட்டு.)

கண்ணிகள்.

வனுந்திர விலங்கினம்
மடியவெல்வோ மித்தினம்
பிறைகபாணி கேடயம்
பெயர்புகழ் தண்டாயுதம்
கொண்ட பெண்கள் தன்னையே
அடி செங்கமலம் நீ
வருவாயிங் கழைத்துமே
மிருகங்க ளனைத்துமே
வதைசெய்து வேட்டையாட
ததிகுடிகள் கொண்டாட

தாதிகள் பாடல்.

பார்ஸ்மெட்.

வல்லபமாகவே செல்லுவோம்
நில்லாது வருவீர் செல்லுவோம் (வ)

வந்தோம் வந்தோம் மகாராணி
தந்தோம் தந்தோம் வந்தனமே (வ)

அல்லி:—சேடிகாள் நமது நாட்டிலுள்ள பிரஜைகளின் இடர்களைத் தீர்த்து ஆதரிக்க வேண்டிய தவசியமே ஆகையால் வேட்டையாடச் சொல்லவேணும் அதிஜாக்கிறதையாக ஆயுதபாணிகளாகிய பெண்களை யழைத்து வருவீர்களாக.

தோழிகள்:—அம்மணி! இதோ வந்துவிட்டார்கள்.

அல்லிபாடல்.

அந்தமிகுந்தபுள்ளி என்றமெட்டு.

கண்ணிகள்.

வில்லம்புவேலுடனே கட்டாரியீட்டி
வல்லபமாயென்னுடனே கொண்டுவருவாய்
நில்லாமற்றிடமுடனே சேனுதிபதி

விலங்கினமுழுதும்
கலங்கிடவாட்டி
வென்றுவருவோ மின்றுவிரைவாய் (வி)

வல்லியஞ்செந்நாய் கரிகள் காடிமுதல்
பொல்லாதபன்றி நரிகள் இடர்செய்யும்
தொல்லையொழிக்கக்கிரிகள் தன்னைச்சார்ந்து
வலைதடி வெற்றிக்கொடி
மலையாமலேகொண்டுதான்
வாட்டிடுவீர் வேட்டையாடி (வி)

அல்லி:—வேடப்பெண்களே! அதிஜாக்கிறதையாக ஆயுதங்களுடனே வரக்கடவீர்கள்.

கிருஷ்ணன் பாடல்.

ஜோக்ஸாந்தேனே என்றமெட்டு.

கண்ணிகள்.

பார்த்திபனே யல்லிதன்னைப்
பார்த்துக்கொள்வாயிதோபோருள்
சீர்த்திசேர்கூடலரசி
நேர்த்தியையும் கீர்த்தியையும் (பா)

வீரமுடன் படைசூழப்
போறவொய்யாரத்தன்மையும்
பாரினிலிவளுக்கிணை
யாருமுண்டோ பாராய் பாராய் (பா)

கிருஷ்ணன்:—காண்டீபனே அல்லியானவள் தனது சேனைகளுடனே யிதோபோகிறுள் பார்த்துக்கொள்வாய்.

அருச்சுனன் பாடல்.

(மெல்லிடை யல்லிதன்னைக்கண்டேன்-என்றமெட்டு.)

கண்ணிகள்.

சிற்றிடையல்லிதனை பார்த்தேன் என்
சிந்தைதனை யவள்மீது சேர்த்தேன்
வெற்றிகொள்வ தெவ்விதம் நானே
விளம்பிடவே வேணுமெங் கோனே

வீரா வேசங்கொண்டு
மிகுபடை திரண்டு
விரைவா யேகுருளெதிர்கொண்டு (சி)

அன்னநடையுள்ள அலங்காரி இந்த
அம்புவியுள்ளோருக் குபகாரி
என்னையே மயக்கிடுஞ் சிங்காரி
இளமயிலின் சாய லொய்யாரி
எதிரில்லாக் கம்பீரி இவள் சரசக்காரி
இப்போது ஆசைகொண்டேன்கோரி (சி)

ஆரணியந்தன்னிலே யிம்மாது வேட்டை
யாடுவதி லிவளுக் கிணையேது
வாரிதி பரவு புவிமீது
மகிழ்வுடன் மணஞ்செய்வ தல்லாது
மனமனது தேருது மாதவா இப்போது
மட்டில்லாதவள் போற்கிடையாது (சி)

அருச்சுனன்:—சுவாமி! அந்த அல்லியினுடைய ரூபலாவண்யம் என்னவிதமென்று பகர்வேன் வண்டதைப் பழித்த கூந்தலும் சந்திரனை நிகர்த்த நெற்றியும் இந்திரனுடையதனுவுக்கு இணையான புருவமும், மீனதைப்போல விழியும், எள்ளுப்பூவுக்குச் சமமாகிய நாசியும், வள்ளைத்தண்டுபோல செவியும், பவளம் போன்ற இதழும், முத்துக்கு நிகரான பற்களும், கமுகுதன்னை யொத்தகழுத்தும், மின்னலைப்போன்ற இடையும், வாழைத்தண்டுக்கு வொப்பானதுடையும், விராலுபோன்ற முழந்தாளும் அன்னநடையுள்ள சிங்காரமுங் கூடியவளாய் வேட்டையாடுகிற சாதுரியம் வெகு உன்னதமாயிருக்கின்றது. அவளைப்பார்த்து வந்ததிலிருந்து என்னுடைய மனதானது அவள்மீது நாடிக்கொண்டிருக்கிறது இப்போது அந்த அல்லியை மணஞ்செய்யவேணும்.

கிருஷ்ணன்:—அருச்சுனு! அவள் எவ்வித அழகுடனிருந்தாலென்ன கண்ணுலே பார்த்துக்கொண்டாயல்லவா நாம் வந்த புண்ணிய காரியத்திற்குத் தடையென்னு வருவாய்.

கிருஷ்ண பகவானுக்கும் அருச்சுனனுக்கும் தர்க்கம்.

( மங்கையாளல்லி-என்றமெட்டு.)

கண்ணிகள்.

மைவண்ணஅல்லியை மணஞ்செய்யாமல்
மானிலந்தன்னி லிப்போது மன
தானதினியே தேருது இங்கு
மர்மமாயிவ் வாறுகூறுதல்
தர்மமாகுமோ யானும்வேண்டினேன் (மை)

கிருஷ்ணன்.

செங்கதிர்சஞ்சரித் திலங்கத்தில்
தீர்த்தயாத்திரைக்குத் தானே வந்து
பார்த்திபனேசொல்லு வேனே இந்தத்
தீவினையெண்ண லாகுமோசெல்லு
பாவங்களெவ் வாறுதீர்ந்திடும் (செ)

அருச்சுனன்.

அன்னைதந்தைகுரு தெய்வம்நீயல்லாது
ஆறுமுண்டோசொல்ல வேணும் அந்த
நேரிழையல்லியை யானும் வெகு
அன்பதாய் மணமேபுரிந்திட
இன்பமாயருள் செய்தால் நன்மையே (மை)

கிருஷ்ணன்.

அல்லியோமிகப் பொல்லாதவளைநீ
யாசித்திடஎண்ண லாமோ பெரு
மோசம்வரும்மழ காமோ உந்தன்
அண்ணனாகிய தர்மர்மற்றுள்ளோர்
உன்னையேநினைந் தே வருந்துவார் (செ)

கிருஷ்ணன்:—விஜையா ! நீஇப்போதுயாலோசித்திருக்கிறது வெகு நன்றாயிருக்கிறது நாம் தீர்த்தயாத்திரைக்குவந்து இப்பேர்ப்பட்ட வீணான காரியத்தை எண்ணங்கொள்கிறாய் அல்லியோமிக வுங்கோபி. அவளுடைய ஆக்கினைவந்தால் நீ தாங்குகிறதற்கு முடியாது உன்னை யேதேனும் கொடூரம் செய்வாள். அவளை விரும்பாதே வருவாய்.

அருச்சுனன்:—மைத்துனரே! அந்த அல்லிராணியை மணஞ்செய் தாலொழியஎன்மனமானது ஒருபோதும் ஒருமைப்படமாட் டாது ஆகையினாலே கிருபைசெய்து அருள்செய்யவேணும்.

கிருஷ்ணன் பாடல்.

(இன்னமெத்தனை தூரம்-என்றமெட்டு)

பல்லவி.

பற்குணசொல்வேனொருபாயம் நீதான்
பார்த்தேயுணர்ந்தால் சம்ப்ரதாயம்

அநுபல்லவி.

மைக்குழலாள் அல்லியின் வழகுள்ளதோழியாக
பக்குவமாகச்செல்வாய் பகர்ந்தேனிதோசிராய் (ப)

சரணம்.

அடவிவேட்டையாடையில் அஸ்திரங்களெடுத்து
திடமாகத்தந்தவட்குச் சேவகஞ்செய்யடுத்து
மனமகிழ்வாயவட்கு வாகுடன்காவல்வருடி
கணையாழிகழற்றிக்கொண்டு கடிகியேவாகிரீடி
செவிகுளிரநற்கதை செப்பியேகீதம்பாடு
புவியிலவளைமணம் புரியத்தந்திரந்தேடு (ப)

கிருஷ்ணன்:—அருச்சுனா? அந்த அல்லியினிடம் அவளுக்குரிய தாதியைப்போற் சென்று வேட்டையாடுங்கால் அம்புகளைப்பொருக்கிக் கொடுத்தும் அயர்ந்த தருணத்தில் கால்பிடித்து இனிமையான கதைகளைச்சொல்லி மகிழும்படி செய்து அவளுடைய கணையாழியை தந்திரமாகக் கழற்றிக்கொண்டு வந்தால் மணஞ்செய்து வைக்கிறேன் சென்றுவருவாயாக.

---

5-வது சீன் ஆரண்ணியம்.

அல்லிராணி வேட்டையாடுகிற பாடல்.

(பதிசிற்றரசர்ப்பகுதி என்றமெட்டு)

கண்ணிகள்.

தனுவிற்கணையை யதியுக்ரமதாய்
ததிதனிலேதொடுத் தெய்திடுவேன்
அனீதத்துடனிடர் விளைவித்திடுமிருள்
அடவிமிருகங்களைக் கொய்திடுவேன் (க)

அல்லிபாடல்.
(சாரங்கந்தன்னிலே என்றமெட்டு.)
சி ட் டா.

ஆங்காரமுள்ளதோர்வேங்கை மதகரிசிங்கம் இந்த
அடவியிலோடுது வெல்வேன திறுடல்கலங்க
பாங்குடனக்கினிபாணங்களேவினேன்
பரிவுடன்மடியுமே திண்ணம்
விரைவினில்வருவீர் பின்னே (ஆ)

வேறு பாடல்.
(புள்ளிமான்வேகமதாய் என்றமெட்டு.)
கண்ணிகள்.

வன்னமாதோடுதெந்தன் மாதர்களேயங்கே இன்று
மலையாதடுத்து அலறவதைத்து
வருவோஞ்சித்தமகிழ்ந்துரைத்தேன் (வ)

அச்சங்கள்சிறிதுமில்லா தந்தரமளாவி
அகமுமகிழ்ந்து அரட்டிதெளிந்து
மிகவேசெல்லுது வெல்லுவேனிப்போது (வ)

அல்லியை அருச்சுனன் வருணித்தல்.
(காமக் களஞ்சியமே-என்ற மெட்டு.)
பல்லவி.

மாமயி லல்லிராணி அழகு
மாமயி லல்லிராணி
மஞ்சுநிக ரபரஞ்சித அஞ்சுக (மா)

அநுபல்லவி.

பூமியிலிவட்கிணையேது புங்கவருலகதின்மாது
போலவே வந்த வொய்யாரி
சாலவே யெனக் குபகாரி

சரணம்.

மதிதனை நிகர்த்திடும் நுதலாள்
மகிமைதரு செவ்விதழாள்
மட அனமே நிகர் நடையாள்
வானதின் மின் கொடி யிடையாள்
மைக்குழலாள் மைவிழியாள்
பக்குவ இன்ப மேகலியாள்

வார்த்தையோ மதுரக்கற்கண்டு
மாதிவளுக் கிணையாருண்டு
மட்டில்லா நற்சுகந்தந்திட
கிட்டினளிங்குமகிழ்ந்திட (மா)

அர்ச்சுனன்:—ஆகா இந்த அல்லியினுடைய தேசசின் காந்தியைப் பார்த்தவுடன் பரமானந்தத்தைத் தருகின்றது என்னஓய்யாரம் என்னகெம்பீரம் எனக்கென்றே இவளைப் பிரம்மதேவன் சிருஷ்டித்திருக்கின்றான் நாம் வீண்காலம் போக்காமல் இவளையெவ்விதத்திலும் மணம்செய்து வைக்கும்படியாய் மாயவனிடந்தெரிவித்துக் காரியத்தை முடிக்கின்றேன்.

அல்லி பாடல்.

(ஆயேமுஜே தர்த்தேஜீ-என்றமெட்டு.)

கண்ணிகள்.

கானகவேட்டை யாடியே களைத்தேனே
கால்பிடிப்பாயடி களைதீரவே
சேய்விழி சேடியேநான் தெளிந்திடவே
ஆலவிருக்ஷத்தின் கீழ்நேர்ந்த மஞ்ச மீது
யானும் சயனிக்கின்றேன் ஆனந்தமாய்
மானே நீ கால்வருடி மகிழச் செய்வாய்

அல்லி:—அடிசேடி இதோ ஆலாவிருக்ஷத்தின்கீழ் அமைந்திருக்கப்பட்ட மஞ்சத்தில்சயனிக்கிறேன் நீ மெதுவாகக் கால்பிடித்து எனக்கு நித்திரை வரும்படி செய்வாயாக.

அருச்சுனன்:—கிருஷ்ணபகவானே இதுவும் உன்னுடையகிருபையே (அம்மணி இதோ கால் பிடிக்கின்றேன்.)

அல்லி:—அடி தோழி செவிக்கி யின்பமாகும்படி அருமையான ஒரு கதை சொல்வாயாக.

அருச்சுனன் சொல்கிறது நொண்டிச்சிந்து.

அம்மணி யழகுவாய்ந்தே வெகு
அருமைசேர்இந்த்ர பிரசித்தமென்னும்
நன்மைசேர் நகரதனை மிக
ராஜரீகஞ்செய்யுமைவர் பாண்டவரில்
தருமர் வீமனுக்கிளைய தம்பி
தாஷ்டிகமுள்ளதோர் விஜயனென்போன்
பெருந்தனு வதைவளைத்து அன்று
பெண்மயில்துரோபதையை மணமேசெய்தான்

காமனை நிகர்த்ததேகன் நாக
கன்னியைமிகக் கலியாணஞ்செய்தோன்
பூமியிலஸ்த் திரவித்தை கற்று
பூரணமாய்வேத முழுதுணர்ந்தோன்
மதுரைக்கரசியே உன் மண
மதுகுளிரவேசெய்யும் கணவனுநும்
இதமுறஉனக்கிசைந்தோன் அவன்
எழிலழகினுக்கிணை யெங்குமில்லை

அர்ச்சுனன் பாடல்.

(பாசுபதம் போலே மதன்-என்றமெட்டு.)

கண்ணிகள்.

மாமதுரையாளு மகா ராணி யல்லியே
மகாராணி யல்லியே நீ
மகிழ நற்கதை பகருவே னினி
மகிமைச் செல்வியே பகருவேன்
மகிமைச் செல்வியே (மா)

அந்தநாளில் தூருவாசர் மந்திரத்தாலே
அவர் மந்திரத்தாலே வெகு
சுந்தரமாய்க் குந்தி மகிழ்வாக
மண்மேலே குந்தி மகிழ்வாக மண்மேலே (மா)

அற்புதமாய்க்கற்பமதில் ஐவர்பிறந்தார்
வீரர் ஐவர்பிறந்தார் அந்த
ஐவர்களில்பார்த்திபனின் னழகுக்கிணை
யார் விஜையன் அழகுக்கிணையார் (மா)

அவனழகைப்பெண்கள்கண்டா லாசைகொள்வார்கள்
மிக ஆசைகொள்வார்கள் இனி
அம்மணியேயவனைக்கலி யாணமேசெய்நலம்
நீகலி யாணமேசெய்நலம் (மா)

விஷயம்.

அருச்சுனன் கதையுரைத்ததைக்கேட்ட அல்லியானவள் ஆங்காரத்துடனே விரைவினிலெழுந்து விஜையனை துரத்த எத்தனிக்கிருள்.

அல்லிபாடல்.

(ஆரடா ஆரடா என்றமெட்டு.)

கண்ணிகள்.

என்னடா என்னடா என்னடா என்னடா
இங்கு ஆண்பிள்ளைவந்தாய்

சின்னமதிகுடிகேடனே இப்போது
சீக்கிரமெங்குசென்றாய்
அம்புவிதன்னிலேயாண்வாடையாகாத
அல்லியென்றறியாயோடா
கம்பீரமாகநீயெங்குமறைந்தாலும்
கண்டுநான்வெல்வேனடா
நெஞ்சந்துணிந்துமே யாரிடமிக்கதை
நேராகக்கூறவந்தாய்
பஞ்சையேஉன்னையே வெல்லுவேன் திண்ணமே
பாவியெங்குமறைந்தாய்

அல்லி:—அடா மூர்க்கா கொஞ்சமேனும்அஞ்சாமல்வந்து ஆண்வாடையாகாத அல்லியென்றறியாமல் கேவலமான கதையை சொல்லுகின்றாய் அடாதுஷ்டா எங்குசென்றாய் உன்னை யொருபோதும் விடப்போறதில்லை இந்தக்ஷணமே உன்னை யெமபுரத்துக்கு அனுப்பி எங்கே மறைந்துவிட்டாய்.

சேடிகள் பாடல்.

(பியாரித்தோரி என்றமெட்டு.)

கண்ணிகள்.

அல்லிமகாராணியே அகோரகோபம்வந்ததேன்
ஆரணியந்தன்னில் அன்னீதம்செய்தவர்
ஆரம்மாகூறுவீரிப்போது
ஆங்காரகோபமாய்நிற்பதேன்

சேடிகள்:—அம்மணி! இந்த ஆரணியத்தினிடமாக விபத்தான காரியஞ்செய்தவர்யார் தாங்களிவ்வாறு கோபத்துடனே யெழுந்திருக்கவேண்டிய காரணமென்ன தெரிவிக்கவேணும்.

அல்லி பாடல்.

(பாங்கியே செங்கமலம் என்றமெட்டு)

கண்ணிகள்.

தாதியேசெங்கமலம் அண்டிவா
சாற்றிடுவேன் கேவலன்
தீதானகதையை யோதினனென்னிடம்
தெரிந்துகொள்வாய்நலம்
பாதகனுனவண்டி எந்தன்பின்
பற்றியேவந்தவண்டி

காதகனவன் பாதம்பிடித்துமே
கதைகளுரைத்தவண்டி
ஓடிமறைந்தாண்டி இங்குநான்
ஒருபோதும்விட்டிடேண்டி
காடதிலவனைக் கண்டுவதையுங்கள்
கடிகியிப்போதுதாண்டி.

அல்லி:—அடி செங்கமலம் ஒரு பாதகனவன் திருட்டுத்தனமாக என்னுடைய கால்பிடித்தும் கேவலமாகிய கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தான் அவன் இன்னனெனதெரியவில்லை இந்த ஆரணியத்தினிடமாக ஓடி மறைந்துவிட்டான் ஆகையினாலே இப்பொழுதே யவனைக்கண்டுபிடித்து வதைத்துவிடுங்கள்.

தோழிகள்:—அம்மணி! தங்களிடம் புருடர்கள் வந்தார்களென்றால் விபரீதமாயிருக்கின்றது இவ்வாறுமனந்துணிந்துவந்தபடியால் வனத்திலுள்ள தேவதைகளாக இருக்கவேணும்.

தர்க்கம்.

(பகாரிச்சல்மீ-என்றமெட்டு.

கண்ணிகள்.

அல்லி—வனதேவதை யென்னிடம்
வருமோ சொல்வாய் சேடியே

சேடி—தனதாக நாங்கள் சொல்வது
சரியென் றெண்ணுவீர் நாடியே

அல்லி—இங்கு வந்தான் பாதகன்

சேடி—யாரும் வந்திடார்களே

அல்லி—அடி மானே வந்ததைப் பார்த்தேன்

சேடி—அம்மா கானில் யாருமில்லையே

அல்லி—மறுபடியு முரைக்கின்றாய்

சேடி—பெரியகோபங் கொள்ளாதீர்

அல்லி—வம்பனைக்கண்டு வதையுங்கள்

சேடி—சம்ப்ரமதாகவே செல்கிறோம்.

---

6-வது சீன். மதுராபுரி எல்லை.

அருச்சுனன்:—சுவாமி! தாங்களுரைத்தபடி தந்திரமாகக் கணையாழியைக்கொண்டுவந்துவிட்டேன்.

அருச்சுனன் பாடல்.

(ஆசைலேசிலே-என்றமெட்டு)

பல்லவி.

கார்மேக வண்ணா கல்யாணஞ் செய்துவையுமே

அநுபல்லவி.

சீராயென்கதை படித்தேன்
சிறந்திடக் கால் பிடித்தேன்
ஆரணங்காய் நடித்தேன்
அம்புபொருக்கிக் கொடுத்தேன்

அல்லிதனை இந்தத் தொல்லுலகில்
நல்ல திருக்கல்யாணஞ்செய்துவையுமே

சரணம்.

பற்குணன் மிகநானே
பாதத்தை பணிந்தேனே
மிக்ககணை யாழிதானே
விரைவினிற் கொண்டுவந்தேனே
மெல்லிடையாள் அந்த அல்லிதனை
நல்லதிருக்கல்யாணஞ்செய்துவையுமே.

(மதுரைமீனாக்ஷி வரந்தருங்காக்ஷி என்றமெட்டு)

கண்ணிகள்.

அன்னநடையல்லியின் அழகியகணையாழி
தனதாய்க்கொண்டுவந்தாலிப்போது
இப்போது தப்பாது
இனிமணமுடிப்பதாய்
சாற்றினது பொய்யாமல்
சாமிவாதுசெய்யாமல் அருள்புரி
தயவதுகூர்ந்து தன்மையதாக
கயல்விழியாளல்லிமங்கையை மங்கையை
இங்கெனக்கிங்கிதமணஞ்செய்யா
தென்மனஞ்சகித்திடாது
சிறுவன்மேலின்னம்வாதேது கூறுவீர்

அருச்சுனன்பாடல்.

(ஆயேசையாம்படுமே என்றமெட்டு)

கண்ணிகள்.

ஆயர்குலநாதனே யல்லிதன்னை
யான்மணஞ் செய்யத்தானே
மாயனே என்மேற் கிருபைவைத்தே
நேயமாயவளை மணஞ்செய்வித்தே
அருள்புரியவேணும் சரணஞ்செய்தேன்யானும்
மருமமாயேதேனும்
வாதுகளென்மீதுசெய்யா தாதரிக்கத்
தாமதமேன் (ஆ)

அருச்சுனன்.—மாதவா! தங்களுடைய கிருபாகடாக்ஷித்தினால் இனி யாவது என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றும்படி அருச்சுனன் வேண்டுகிறேன்.

கிருஷ்ணன்:—காண்டீபனே! இப்போது உன்னாலொரு காரியமாக வேண்டியதாயிருக்கிறது அதன்விபரந் தெரிவிக்கின்றேன்.

கிருஷ்ணன்பாடல்.

(தனஞ்சயனேயிப்போ என்றமெட்டு.)

கண்ணிகள்.

வில்விஜையனேயினி மெத்தவே தண்ணீர்த்தாகம்
மேலிட்டெனக்குக்களைப்பாகுதே
தொல்புவிமீதிந்தச் சோகமகன்றிடவே
துரிதமாய் ஜலங்கொண்டு இப்போதே
சொந்தமாகவந்தெனக்குத் தந்தாலுண்மையாய்
சிந்தைமகிழ அவளைமணமும் தன்மையாய்ச்
செய்துவைப்பேன் ஐயமில்லைமிகநன்மையாய் (வி)

கிருஷ்ணன்:—விஜையனே! எனக்கோ தண்ணீர்த்தாக மதிகரித்திருப்பதால் மிகவுங்களைப்பாயிருக்கிறது ஆகையினாலே அதிசீக்கிரம் ஜலங்கொண்டு வருவாயாக.

அர்ச்சுனன்:—சுவாமி! இதோ ஜலம் சீக்கிரத்திற் கொண்டுவருகிறேன்.

கிருஷ்ணன்-விருத்தம்.

மைக்குழலல்லியைப்போல் படமதுதான்வரைந்து
அக்குளக்கரையிலுள்ள விருக்ஷத்திலழகாய்க்கட்டி
பக்குவமாகநீரில் படமதினிழல்காண்பிப்போம்
பற்குனன்நோக்கிச்செய்யும் பண்மையைத்தெரிவோமின்றே.

கிருஷ்ணன்:—நாம் அந்த அல்லியைப்போல உருவெழுதிக்கொண்டுபோய் அருச்சுனன் தண்ணீர்மொண்டுகொண்டிருக்கும் பொழுது இந்தப்படத்தினிழல் ஜலத்தினிடமாகத் தெரியும் படியாக விருக்ஷத்தில்கட்டிவைப்போம் இதைநோக்கி இவன் என்னசெய்கிருனென்று பரிசோதிப்போம். (அருச்சுனன் ஜலங்கொண்டுவரச்செல்லுங்கால் அல்லியைமனதில் நினைந்து கொண்டே செல்கிருன்.)

அருச்சுனன் பாடல்.

(பாதிராத்திரிவேளையில்விட்டு என்றமெட்டு.)

கண்ணிகள்.

மாது அல்லியை காதலாய்ப் பார்த்து
வந்தநாள்முதல் நெஞ்சம் நாடி
விந்தைசேரவளைக்கொஞ்ச மெத்த
வருந்துறேன்பிரபஞ்சம் தன்னில்

மதிகுலேந்தேனே ததியே எனக்கு
மட்டில்லாதவளே தஞ்சம்

மாயவன்தன்சகாயத்தா லின்று
மனமகிழ்வுடனுனே திரு
மணமதுசெய்குவேனே இதோ
வாருடன்தண்ணீர்தானே கொண்டு

வந்து இன்றுகோவிந்தமூர்த்திக்கி
வாகாய்த்தாகந்தீர்ப்பேனே.

அருச்சுனன்:—அந்த அல்லியைக்கண்டு வந்ததுமுதல் எனக்கு அவள்மீது ஆசையதிகரித்து மணஞ்செய்ய வேணுமென்கிற அபாமிகுந்து கவலேயோபெருவாரியாயிருக்கிறது இனியிதற்கு வழியொன்றும் புலப்படவில்லே ஆகிலும் எனக்கு அந்தக் கிருஷ்ணபகவான் துணையாகவேண்டும் தண்ணீர் கொண்டுவந்தவருடைய தாகத்தைதீர்த்து என்காரியத்தை முடிக்கிறேன்.

---

7-வது சீன். பூங்காவனம் தடாகம்.

விஷையம்.

அருச்சுனன் தண்ணீர் மொண்டுகொண்டிருக்குங்கால் அந்த ஜலத்தில் படத்திலுள்ள அல்லியினுருவத்தினிழல் ஜலத்தில் தெரிய அதைநோக்கி விஜையன் ஆசையுறுதல்.

அர்ச்சுனன் பாடல்.

(நிக்கநிக்க சொக்குதெந்தன்-என்றமெட்டு)

பல்லவி.

கண்டுகொண்டேன் அல்லிதானிதோ நிற்கின்றாள்

அநுபல்லவி.

கெண்டையே நிகர்த்த கண்ணால்
என்னையே பார்க்கின்றாள்

சரணம்.

அண்டியே வருவாயே அன்பாய் முத்தந்தருவாயே
வண்டார்க்குழ லொய்யாரி மதிநுத லலங்காரி
மாதேயுந்தன் மீதாசையால் வேதையுற்றேனிப்போது (க)

(மருவே செறித்த-என்றமெட்டு.)

கண்ணிகள்.

மதியை நிகர்த்த நுதல்சேர் மின்னல்லி
மயிலே யுகந்து வருவாயே
ததியே எனக்கு இதமாயோர் முத்தம்
தனதாக வந்து தருவாயே
உனையே நினைந்து மனதோ வருந்தி
உடலே மெலிந்தேன் உணர்வாயே
எனையே மணந்து கனமே மிகுந்து
இனிதா யிணங்கிச் சுகமேதா

மஞ்சுநிகர் குந்தள-என்றமெட்டு.

கண்ணிகள்.

அன்ன நடையாள் அல்லிமானே
அன்புடனே தென்பதாய்தானே
ஆசைமிகுந்தோடி வந்தேனே நீ
அட்டியில்லாமல் கிட்டிவந்தெனை
இஷ்டங்கொள்ளுவாய் மட்டில்லாத
ஆரணங்கு முத்தமே தந்து
அகமகிழ்ந்து சுகமிகுந்து
சீரதாய்மணஞ் செய்யுகந்து

அர்ச்சுனன்:—எந்தனுசைக் கண்மணியாகிய அல்லியே! நீ என் மீது வாது செய்கிறது தருமமாகுமா இந்தத் தடாகத்தின் ஜலத்தினுள் வந்திருந்து கொண்டு மோடி செய்கிறாயே என்னருகில் வந்து ஒரு முத்தந் தரக்கூடாதா? அடிமதுரைக்கர

சியே! அளவில்லா இன்பந்தருஞ் சரசியே! என்னை மயக்க வந்த மோகனுங்கியே! இணையில்லாச் சுகங்கொடுக்கும் பாங்கியே! இன்னமுனக்கு மன திரங்கவில்லையா தயவுசெய்து அருகில் வருவாய் நீ பேசாமல் நிற்பது நலமல்ல கொஞ்சம் பேசுவாய்.

(மானேயங்கு போனவகை என்னடி-என்றமெட்டு.)

பல்லவி.

தாரார்மதிவதன சுந்தரியே நீ
சற்று மிணங்காதிருப்பது சரியோ

அநுபல்லவி.

ஆராவமுதாகிய அல்லியே
அதிவிற்பன்ன முளாஞ்சித
மதுரக்கனி நிகர்வாயுள்ள (தா)

சரணம்.

கன்னல்நிகர்மொழி யன்னமே சொர்னமே கற்புக்கரசியே
இந்தக்—காசினிதன்னிலே நேசிக்கவந்த என் காதற்சரசியே
தண்ணீருள்நிற்பது தகுமோஎன்னேசியே
தருணத்தினி லொருமுத்தமே
தருவாயடி யருகில் வந்து (தா)

பொன்னெளிதேகமயிலே உனையொருபோதும் பிரியேனடி
எந்தன் புத்தியைமயக்க எத்தனித்தேவாது
புரிந்தாலென்செய்வேனடி
இன்னம்பராமுகம்நீசெய்வதேனடி
எனதுக்கிசைந்திடுவஞ்சியே
தனதாயென்முன்னேபேசுவாய் (தா)

அருச்சுனன்:—ஆஹா இதென்ன இந்த அல்லியினருகில் சென்று கொஞ்சம் வார்த்தையாடப் பிரீதிகொண்டு தடாகத்துள் புகுந்து தேடிப்பார்த்தாலிவளைக் காணப்படவில்லை என்னுடையகையில் ஜலஜீவன்க ளகப்படுது கரையில்வந்து பார்த்தால் இதோ நிற்கிருள்.

(நைஞேஜோப்பன் வாலிமைக்கோ"என்றமெட்டு.)

பல்லவி.

அரிவையல்லிராணியுன்மேல்
ஆசைகொண்டேன்

அநுபல்லவி.

ஆசைகொண்டேனுன்மேல் ஆசைகொண்டேனடி (ஆ)

சரணம்.

அருகினில்வருவாய் ஒருமுத்தந்தருவாய்
அன்னமேஉன்மேல் ஆசைகொண்டேன் (ஆ)

தையலேநீமோடி செய்வதழகோடி
தனஞ்சயன்உன்மேல் ஆசைகொண்டேன் (ஆ)

அருச்சுனன்:—ஆஹா இதென்னஆச்சரியமாயிருக்கிறதுஇப்போது இருந்த அல்லியானவள் எங்குசென்றுவிட்டாள் என்னைச் சோதித்துப்பார்க்கிறளோ இவளுடையமர்மம் இன்னதென்று புலப்படவில்லை இனிக்காலதாமசம் செய்யாமல் தண்ணீர் கொண்டுவரவில்லையென்று கிருஷ்ணன் கோபிப்பார்.

(வாதனையாகுது மைத்துன போய்-என்றமெட்டு.)

கண்ணிகள்.

தாகமாயிருக்குது தண்ணீரதிசீக்கிரம்
தனஞ்சயனே கொண்டுவா வெனத்தானே
தன்மையாயனுப்பினர் கண்ணபிரானுமின்றே
தாகம்பொறுப்பாரோ தெரியேனே
தண்ணீர்கொண் டருச்சுனன் வருவானென்றுதான்
எண்ணிக்கொண்டெதிர் நோக்குவாரென்னசெய்குவேன்
அல்லி தண்ணீரிலோடி மறைந்தாள்
தாமோதரனுக்குத் தண்ணீர்கொண்டு செல்வேன் (தாக)

(உன்னைநம்பினேன் ஜெயஜெயராமா என்றமெட்டு.)

பல்லவி.

தண்ணீர்கொண்டு தானிதோ செல்லுவேனே
தண்ணீர்கொண்டு தானிதோ செல்லுவேனே

அநுபல்லவி.

கண்ணபிரானுங் களைத்திருப்பாரே
இன்னேரமாய் வீண்காலம் போக்கினேனே (கண்)

சரணம்.

நங்கையல்லியாலே நாழிகையானதே
தங்கிடாமல் நானிதோ செல்குறேனே (தண்)

விஷயம்.

அருச்சுனன் தண்ணீர் கொண்டுசென்ருன் இவனை நோக்கி இதுகாலவரை தாமதித்தது யாதுகாரணம் என்று பகவான்வினவ அல்லிராணியை தடாகத்துள்ளே கண்ணுற்று அருகிற்செல்ல எத்தனித்தேன் ஒடிமறைந்துவிட்டா ளென்றனன் இதை தாமோதரனறிந்து இன்னுஞ் சோகிப்போமென்று மைத்துனு தண்ணீர் அருந்தினதும் நித்திரைவருகிறது உன்னுடைய துடையில்சாய்ந்து கொஞ்சநேரஞ் சயனிக்கின்றேன் என்று கூறுகிருர்.

கிருஷ்ணன் பாடல்.

(புள்ளிக்கலைமயிற் பாகன்-என்றமெட்டு.)

நித்திரை செய்தெழுந் துனக்கு மனம்
நெறியுடன்செய்வேன் மனங் களிக்க இன்று
நீதானினி மயங்காதே நானுஞ்சொன்னேன்
தெரிவாய் உரைந்தருவாய்
சித்தம்போல் முடிக்கிறேனுறுதி யாக
தெரிவித்தே னுணர்வாய் நீ கருதி அந்தச்
சேயிழையை யினி நேயங்கொள்வாயிது
தகியே இந்தப்பதியே

விஷயம்.

அருச்சுனன் மதுரைக்கரசியாகிய அல்லியை பார்க்கவேணுமென்கிற அவாமிகுந்து பாராங்கல்லையெடுத்து கிருஷ்ணபகவான் தலைக்குயரமாய்வைத்துவிட்டு தன்துடையைநீக்கி மெதுவாக எழுந்திருந்து அல்லியைநோக்கி நினைந்துகொண்டே செல்கிருன்

அருச்சுனன் பாடல்.

(உத்தேசம்பதினாறு வயதுள்ளமாது என்றமெட்டு.)

கண்ணன்றனக்குத் தலையணையாக
கனமுடனேபெருங் கல்லைச்சீராக
திண்ணமதாய்வைத்துச் செல்கிறேனிப்போது
சேயிழையல்லியைக் கண்டாலேபோதும் (க)

மாயவன்றுயின் றெழுந்திடுமுன்னே
வந்திடுவே னுறுதியதுசொன்னேன்
தூயமதுரைக்கு வழியிதுதானே
தொடர்ந்தேயவளைக் காணுதிருப்பேனே (௨)

அரிவையல்லிதனைக் காணஉகந்தேன்
அவளைமணமது செய்யத்துணிந்தேன்
பரிவுடனவள்வாழ் பதியதைக்கண்டேன்
பண்டுவினைகள்தீர்ந் தானந்தங்கொண்டேன் (க)

அருச்சுனன்.—பகவானே நித்திரையிலிருக்கிறார் இனிநமது துடையை மெதுவாயெடுத்துக்கொண்டு ஒரு பாராங்கல்லை இவர் தலைக்கு தலையணையாக வைத்துவிட்டுச் சென்று காதற்கனியாகிய அல்லியைப் பார்த்துவிட்டு கண்ணனெழுந்திருக்குமுன்னேவந்துவிடுவதாக இதோ செல்கிறேன்.

விஷயம்.

அருச்சுனன் போனதின்பின்பு மெதுவாயெழுந்துபார்க்க இவனில்லாதறிந்து அடே பெண்மாய்கையிற் சிக்கியதிருடா உன் செய்கை அறிவேனென்று குறத்திவேடம்பூண்டு கிருஷ்ணன் செல்கிறார்.

---

## அ-வது சீன்.

அல்லிஜலக்கிரீடைசெய்யும் தடாகத்துக்குச் செல்லும்வழி
பகவான் குறத்திவேடம்பூண்டு வருதல்.

(சிக்கசிக்கச்சொக்குதெந்தன் என்றமெட்டு.)

பல்லவி.

வஞ்சிகுறமாது வந்தேன்
மகிழ்வாக (வஞ்)

அநுபல்லவி.

வாசவன்மகன் மனதைச்சோதிக்க
யானுமாயமதாக (வஞ்)

சரணம்.

ரஞ்சிதமாகவேதனஞ்சயனிவ்வழி
நாடியேவருவானல்லி
நங்கைதனைத்தேடி (வஞ்)

சரிகைபாவாடைகட்டி பரிவுடனிதோகிட்டி
உரியபணிகள்முழுதுமிலங்க
உன்னதமாகவேநடைகுலுங்க (வஞ்)

(பாசுபதம்போலேமதன் என்றமெட்டு.)

கண்ணிகள்.

பாரிலுள்ளபாவையர்காள் பச்சைகுத்தலையோ
பல்லிப்பச்சைகுத்தலையோ

பவளப்பச்சைகுத்தலேயோ மிகப்
பாம்புபச்சை குளத்துப்பச்சை
பரிந்துகுத்தலேயோ (பா)

தேளுப்பச்சைகுத்தலேயோ சிறந்தபெண்மயில்காள்
தகுந்த பெண்மயில்காள்
நான்-சீரதாகப்பலவிதபச்சை
தெளிந்து குத்திடுவேன் பச்சைகாள்
தெளிந்து குத்திடுவேன்

அருச்சுனன்.—இந்தப் பெண்மணியானவள் குறப்பெண்போலக்காணப்படுகின்றது இவளை யின்னுரென்று வினவுவோம் அம்மா நீயார்? எந்ததேசம்? இந்த ஆரணியத்தினிடமாகவரவேண்டிய காரணமென்ன?

தெய்வக்குறத்தி.

(இருப்பு சங் லிபோலே-என்றமெட்டு.)

கண்ணிகள்.

எந்தனது திருநாடு தானே யினிநானே
சொல்லுவேனே நீ
இன்பமாககேளினியே தம்பி
என்னை நம்பி (எ)

கொச்சிமலை குடகுமலைநாடு
வங்காளம் எங்கள்நாடு சதா
குன்றுறையும் குமரன் வாழும்
நாடு எங்கள் நாடு (எ)

அருந்தவமுனிவர் வாழும் நாடு
ஆயர் நாடுங்கள் நாடு அந்த
அமரேசன் வாழுந்திருநாடு
எங்கள் நாடு (எ)

சரியான குறிசொல்லுங் குறமாது நானிப்போது
மண்மீது வெகு
தண்மையாகக் குறியுரைக்க வந்தேன்
மகிழ்ந்தே (எ)

அருச்சுனன்.—அம்மா நீ குறிசொல்வதாகச் சொல்லுகிருயே எனக்கு பிசகாது ஒரு குறிசொல் பார்ப்போம்.

## தெய்வக்குறத்தி குறிசொல்லுதல்.

(கூடியாத்திரமே என்றமெட்டு)

கண்ணிகள்.

குறிசொல்வேன் தம்பி நல்ல
குறிசொல்வேன் தம்பி
தருமருக்கிளைய தம்பிநீதானே
சந்திரகுலத்துப்பாண்டவரென்றேனே
அரிவையல்லியைத்தேடியேசெல்கிறாய்
அவளை மணந்திட ஆசைகொள்கிறாய் (கு)

ஆயனோடுகந்தாய் தீர்த்த
யாத்திரைக்குவந்தாய்
சேயிழையல்லிமேல் சிந்தையேகொண்டு
திரிந்தலைகிறாய் மனதோமருண்டு
போயவடன்னைநீ பார்க்கவோ துணிந்தாய்
புயல்வண்ணனைக்காணுமலேவந்தாய் (கு)

(சீர்வளர் பசுந்தோகைமயிலா என்றமெட்டு.)

கண்ணிகள்.

பாரவில்லைதவளைத்தேனீதான் அந்தப்
பாஞ்சாலிதன்னை மணஞ்செய்தவனுநீதான்
ஆறுயிரம்பாண்டியர்க்குமகளாம்
அவள்-அழகதனைப்பார்க்கச்செல்லும்
தனஞ்சயனும்நீதான் (பா)

குறியதுசொல்வதிலே சமர்த்தி நான்
கூறுவதுபொய்யுமில்லை யிகத்தில்
அறிகுவாயிதையெல்லாம்நீதான் தம்பி
யான்சொல்வதுபிசகோ
பகர்ந்திடுவாய்நீதான் (பா)

அருச்சுனன்:—அம்மாநீசொல்வதெல்லாம் உண்மை நான்கோரிய படி அந்த அல்லியானவள் என்னைமணந்து கொள்வாளோ தெரிவிப்பாய்.

குறத்தி பாடல்.

பஞ்சவர்ன்னமே-என்றமெட்டு.

கண்ணிகள்.

அல்லிதானுமக்குக் கிட்டும்படிசெய்தால்
அரிவையெனக்கென்ன தருவீரையா
நல்லவேளையென் முன்பகர்வீர்மகிழ்வுடனே
நாளொருதந்திரம் சொல்வேனையா

அருச்சுனன் பாடல்.

மாசில்லாதகுறவஞ்சியே வேணபொருள்
மகிழ்வுடனுனக்குத் தந்திடுவேன்
நேசியல்லிதனை மணம்புரிகிறவகை
நீயுரைப்பாய் நானுகந்திடவே

குறத்திபாடல்.

கொற்றவரேநான் கொடுக்குங்குளிகையை
குணமுடனல்லியின் குளத்திலேதான்
பற்றறத்தறைத்தால் தண்ணீரையுண்டு-அதில்
பரிவுடன்மணங்கொள்வான் உந்தனைத்தான்

அர்ச்சுனன் பாடல்.

நல்லதினியுந்தன் மனதுபோற்குளிகையை
நானிதோகறைக்கிறே னக்குளத்தில்
உல்லாசமாகவே உறைக்கிறேன் தடையில்லை
உகந்துதருவாயினி யித்தலத்தில்

அர்ச்சுனன்:—அம்மா இதோ ஆடையாபரணங்கள் கொடுக்கிறேன் அந்தக் குளிகையைத் தருவாய் நான்கொண்டுபோய் கறைத்து விட்டு வருகிறேன்

விஷயம்.

குறத்தி கொடுத்த குளிகையை அல்லிக் குளத்தில் அருச்சுனன் கறைத்து விடுகிறுன்.

அல்லி அர்ஜுனா.

முதற்பாகம்-முற்றிற்று.

# விளம்பரம்

உ

குகமயம்

வெளிவந்தது! வெளிவந்தது!

சந்தத்தின் அருமையும், செந்தமிழ்ப் பெருமையுடம்,
அதிநூதன பார்ஸி வர்னமெட்டுகளின்
திறமையும் பொருந்திய (துவாதசாந்தமென்னும
திருவாலவாய் க்ஷேத்ரவித்வான்
ஸ்ரீ எம். பாண்டியதாஸ் அவர்கள் இயற்றி

## பக்திரசக் கீர்த்தனங்கள்.

நண்பர்காள்! முக்கிய கவனிப்பு ஷை பக்திர கீர்த்தனையில ஸ்ரீ மதுவிநாயகக் கடவுள்ன்பத்தி ஆறு முகக்கடவுளாகிய சுப்பிரமணியருடையபக்தி மதுரை மீனாக்ஷிசுந்தரேஸ்பராள் பக்தி ஸ்ரீ வைகுந்தபதியாகி ஸ்ரீமந்நாராயணருடைய பக்தி பொருந்திய ஆசிரி விருத்தம் கழிநெடில் விருத்தம் கலித்துறை சந்தவிரு தங்களின்நேர்த்தியும், திருப்புகழ், தேவாரப் பதைச மைந்த பாடல்களும, தற்கால நாகரீகவிபூதன் இந் தான் பார்ஸி கஜல், டோமரி, வர்னமெட்டுகள [illegible] யகீர்த்தனைகளின் சிர்த்தியும, ஒ[illegible] பவர்களுக்கே நன்கு விளங்கும்.

கமலநாதன்

அதிரூப அமராவதி

இட்டா-சக்கர[illegible]

நெ-1[illegible]